## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

## THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.V,MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | C.C.No.327/2021 |
| **Deposition of witness** | : | PW 3 |
| **Name of the witness** | : | மைதீன் |
| **Husband/Father's Name** | : | பசீர்முகம்மது |
| **Address** | : | கடவூர், சத்திரப்பட்டி, மதுரை |
| **Occupation/ Calling** | : | கூலி |
| **Age** | : | 50/2026 |

**நாள் 10/06/2026**

சாட்சிக்கு திருமதி.சிந்துஜா எழுத்தர் நிலை-3, அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டார்.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விபத்தில் இறந்த சுல்தான் பீவி எனது அம்மா. கடந்த 30.12.2020 அன்று நான் எனது வீட்டில் இருந்தபோது மதியம் சுமார் 12 மணியிலிருந்து 2 மணி இருக்கும் அ.சா.2 எனது தங்கச்சி எனக்கு போன் செய்து அ.சா.1 எனது மச்சினன் எனது அம்மாவுடன் மருத்துவமனைக்கு சென்றுவிட்டு திரும்பி இருசக்கர வாகனத்தில் வந்தபோது சின்னம்பட்டி அருகில் அவர்கள் பின்னால் வந்த லாரி இடித்து விபத்து ஏறப்ட்டதாகவும் அதில் எனது அம்மா சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும் கூறினார். உடனே நான் சம்பயிடத்திற்கு சென்று பார்த்தேன். அங்கிருந்து அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் ஏற்றி சென்றார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வாய்ப்பளித்தபோதும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.5
மதுரை